விசாரித்ததில் அந்த அதிகாரி தடுக்கப்படவில்லை என்றும் இருவரும் சற்றுக் கடுமையான முறையில் வார்த்தைகளை உபயோகித்துக்கொண்டார்கள் என்றும் தெரிய வந்தது. ஆகவே நடவடிக்கை எதும் தேவையில்லை என்று அது கைவிடப்பட்டது.

## *Tamil Nadu Police Team at the All India Meet*

* 232 *Q*.—THIRU L. BALARAMAN (on behalf of Thiru S. Vellapandian): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Police Team has won distinctions at the All India Meet held at Cuttack during 1973;

(*b*) if so, the details thereof; and

(*c*) the incentives given to the participants of the Meet?

## அகில இந்திய விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு காவல் துறைக் குழு

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-ஆம் ஆண்டில், கட்டாக்கில் நடந்த அகில இந்திய விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு காவல் துறைக் குழு சிறப்புப் பரிசுகள் பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அப்போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு எந்தெந்த வகையில் ஊக்கமளிக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம். கட்டாக்கில் நடைபெற்றது பணித்திறமைப் போட்டியாகும்.

(இ) கட்டாக்கில் 27—11—1973 முதல் 2—12—1973 வரை நடைபெற்ற 17-வது அனைத்திந்திய காவல்துறையினர் பணித்திறமைப் போட்டியில் (XVII All India Police Duty Meet.) இடம் பெற்ற நிகழ்ச்சிகள் அனைத்திலும் தமிழ்நாடு காவல்துறை குழுவினர் பங்கெடுத்துக் கொண்டனர். "புலனாய்வில் அறிவியல் சாதனங்கள்" (Scientific Aids. in Investigation) போட்டியில் அவர்கள் தொடர்ந்தாற்போல் ஐந்தாவது ஆண்டாக வெற்றி கண்டு, அதற்கான கோப்பையைத் தக்க வைத்துக் கொண்டனர். "புலனாய்வில்

அறிவியல் சாதனங்கள்" போட்டியில் மட்டும் அவர்கள் ஆறு தங்கப் பதக்கங்களையும், நான்கு வெள்ளிப் பதக்கங்களையும், நான்கு வெண்கலப் பதக்கங்களையும் பெற்றனர். அத்துடன் முதலுதவி சிகிச்சையில் குழுப் பணிக்கான வீரக் கேடயத்தையும் (Championship Shield) அக்குழுவினர் பெற்றனர். மொததத்தில், தமிழ்நாடு காவல்துறை குழுவினர், மூன்று கேடயங்கள், ஆறு கோப்பைகளைத் தவிர, பதினேறு தங்கப்பதக்கங்களையும் ஏழு வெள்ளிப் பதக்கங்களையும், நான்கு வெண்கலப் பதக்கங்களையும் பெற்றனர்.

(உ) காவல்துறை குழுவினரில் முதலாவது, இரண்டாவது, மூன்ருவது பரிசுகளைப் பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகளும் அளிக்கப்பட்டன. மற்றவர்களுக்கு நற்பணிக் குறிப்புகள் வழங்கப்பட்டன.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, மொத்தப் பரிசுகள் எவ்வளவு வழங்கப்பட்டன? அவற்றில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பெற்ற பரிசுகள் எவ்வளவு? தமிழ் நாட்டிற்கு அடுத்தபடியாக வந்த மாநிலம் எது எனத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தமிழ் நாட்டிற்கு அடுத்தபடியாக வந்த மாநிலம் பற்றிய விவரங்கள் ஏதும் இல்லை. பரிசுகளைப் பொறுத்தவரையில், நான் முதலிலேயே சொன்னேன். ஆனால் மொத்தப் பரிசுகள் எவ்வளவு என்ற விவரமும் இல்லை. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பதினேரு தங்கப் பதக்கங்களையும், ஏழு வெள்ளிப் பதக்கங்களையும், நான்கு வெண்கலப் பதக்கங்களையும் பெற்ருர்கள். அது மட்டுமின்றி வீரக் கேடயத்தையும் அவர்கள் பெற்றிருக்கின்ருர்கள்.

*Drafting best Judgment in Tamil*

*237 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of Thavathiru Kundrakkudi Adigalar): Will the Hon. the Minister for Industries be pleased to state the number of persons who were awarded so far by the Tamil Nadu Government for drafting best judgment in Tamil?

தமிழில் சிறந்த தீர்ப்பு எழுதுதல்

புலவர் ஓ. அறிவுடைநம்பி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழில் சிறந்த தீர்ப்பு எழுதியதற்காக இதுவரையில் தமிழக அரசு எத்தனை பேருக்குப் பரிசு வழங்கியிருக்கிறது?